**அசல் வழக்கு எண். 22/2021** **தேதி-15.07.2025**

**வா.சா.1 - கோவிந்தராஜ்**

**<u>மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, 1 முதல் 8 வரையான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 புகைப்படத்தில் உள்ள கோவில் தாவா கோவில் இல்லை என்றால் சரிதான். அது பெரிய பண்ணையின் கோவில் ஆகும். வா.சா.ஆ.4 புகைப்படத்தில் உள்ள கோவில் தாவா கோவில் இல்லை என்றால் சரிதான. அது சின்னப்பண்னை கோவிலின் புகைப்படம் ஆகும். வா.சா.ஆ.5 புகைப்படத்தில் உள்ள கோவில் தாவா கோவில் இல்லை என்றால் சரிதான. அது சின்னப்பண்னை கோவிலின் புகைப்படம் ஆகும். வா.சா.ஆ.6 புகைப்படத்தில் உள்ள கோவில் தாவா கோவில் இல்லை என்றால் சரிதான. அது சின்னப்பண்னை கோவிலின் புகைப்படம் ஆகும். வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.6 வரையான ஆவணங்களில் உள்ள கோவிலுக்கும் தாவா கோவிலுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ. 10 மின் கட்டண அட்டை ராஜ் என்ற நபரின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ராஜ் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். அவர் இறந்து 20 வருடங்கள் ஆகிருக்கும். மேற்படி ராஜ் என்பவரின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் குமார் என்ற அவரது மூத்த மகனை மட்டும் தரப்பினராக சேர்த்துள்ளேன். ராஜ் என்பவரின் மனைவி, மற்றும் மற்ற மகன் மற்றும் மகள் ஆகியோரை தரப்பினர்களாக சேர்க்கவில்லை. தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் வழக்கிற்காக நாங்கள் தயார் செய்த ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா கோவில் பொறுத்து எங்களுக்கு எந்த உரிமையும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள எந்த பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>9 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.. 9 ம் பிரதிவாதியின் எதிர் வழக்குரையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 9 ம் பிரதிவாதியை இவ்வழக்கில் எதற்காக தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் அது பற்றி தெரியாது. 9 ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கில் என்ன பரிகாரம்

கோரியுள்ளோம் என்றால் பரிகாரம் ஏதும் கோரவில்லை. 9 ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்துவிடலாம் என்றால் செய்துவிடலாம். கோவில் சம்மந்தமான பிரச்சனை ஏற்படும் போது அதை தெரிவுபடுத்த வருவாய் அலுவலர் தான் முறையான அதிகாரி என்றால் சரிதான். மேற்படி வருவாய் அலுவலரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்கள் அனைத்தும் அரசுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா கோவில் இந்துசமய அறநிலைய துறை பராமரிப்பில் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி கோவிலில் பூசாரி உள்ளரா என்றால் உள்ளார். மேற்படி பூசாரி அரசு நலவாரியத்தில் மாதந்தோறும் ரூ.1000/- பெறுகிறாரா என்றால் இல்லை.

2. தாவா கோவில் இந்து சமய அறநிலைய துறையின் பராமரிப்பில் இருந்து வருகிறது என்றும், அதனால் தான் அவர்களை தரப்பினர்களாக இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. தாவா கோவில் பொதுவான கோவிலா என்றால் சரிதான். தாவா கோவில் தனிப்பட்ட முறையில் யாருக்கும் பாத்தியம் இல்லை என்றால் சரிதான். முறையான தரப்பினர்களை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**